රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Services, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතනය / தொலைபேசி: (94) 011- 2694560 / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: (94) 011- 2692254 / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: dgcs@pubad.gov.lk / E-mail
වෙබ් අඩවිය / இணைத்தளம்: www.pubad.gov.lk / Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/පොදු/01

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2020.10.16

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

மாவட்ட செயலாளர்கள்

பிரதேச செயலாளர்கள்

**2020.01.01 ஆந் திகதிக்கு முன்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களின் நியமனங்களை நிரந்தரமாக்குவது தொடர்பில் தகவல் கோரல்**

2020.01.01 ஆந் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை உத்தியோகத்தர்களின் நியமனங்களை நிரந்தரமாக்கும் செயற்பாடுகளைத் துரிதமாகப் பூர்த்தி செய்யும் தேவையைக் கவனத்தில் எடுத்து நியமனங்களை நிரந்தரமாக்குவதற்காக சிபாரிசுகள் அனுப்பப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் நியமனம் நிரந்தரமாக்கப்படாத உமது அமைச்சில்/திணைக்களத்தில்/ மாவட்ட செயலகத்தில்/ பிரதேச செயலகத்தில் சேவையில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தகவல்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை CS/DOS/Con/Inf/2020 (இணைப்பு 1) இற்கு இணங்க தயாரித்து அதன் வன் பிரதிகளை 2010.10.30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறும் மென் பிரதிகளை (Microsoft Excel) mailto:adcs5-dos@pubadgov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கூடியவிரையில் எனக்கு கிடைக்கச் செய்யுமாறும் பணிவுடன் அறியத்தருகிறேன் (இப்படிவத்தை http://www.pubad.gov.lk/ இலுள்ள ஏனைய அறிவித்தல்கள் என்பதிலிருந்து பதிவிறக்கிக் கொள்ள முடியும்)

02. மேலும், 2020.01.01 ஆந் திகதிக்கு முன்னர் நியமனம் கிடைத்து தகுதிகாண் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, எனினும் இதுவரையில் நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு சிபாரிசு செய்யப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் சிபாரிசுகளைச் சமர்ப்பிக்கும் போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை CS/DOS/Con/App/2020 (இணைப்பு 2) இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி தேவையான அனைத்து இணைப்புக்களுடனம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை பணிவுடன் அறியத் தருகின்றேன்.

03. 2020.01.01 ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களின் நியமனங்களை நிரந்தரமாக்கும் போது எனது PA/CS/POLICY/Guidelines ஆம் இலக்க 2020.08.24 ஆம் திகதிய கடிதத்திற்கு இணங்கச் செயற்படுமாறும் அக்கடிதத்தின் 03 ஆம் பந்தியிலுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க 2020.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் 06 மாதங்களுக்குள் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ள ஆவணங்களைத் தாமதமின்றி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்